**7.1.17 Number of activities conducted for promotion of universal values (Truth, Righteous conduct, Love, Non-violence and peace); national values, human values, national integration, communal harmony and social cohesion as well as observance of fundamental duties during the last five years. (2)**

**Year 2018**

**December:**

**Awareness on careers in Indian Navy 65 participants participated on19.12.18 at MSEC**







**October:**

**National Unity Day3500 participants participated on31.10.18 at MSEC**





MOHAMED SATHAK ENGINEERING COLLEGE KILAKARAI 623806

PRINCIPAL
MOHAMED SATHAK ENGINEERING COLLEGE
KILAKARAI-623806.

**National blood donors Day 30 participants participated on01.10.18 at Madurai Meenakshi mission Hospital**




**August:**

**Independence Day 263 participants participated on15.08.18 at MSEC**









**Year 2017**

**August:**

**Independence Day 163 participants participated on15.08.17 at MSEC**




**New India Initiative pledge by promising the vision 20221700 participants participated on11.08.17 at MSEC**




**Dr. APJ Abdul Kalam movement for National Integration 110 participants participated on 26. 07.17 at MSEC**












**Dr. APJ Abdul Kalam second Remembrance Day Marathon 105 participants participated on 25. 07.17 at MSEC**











**Dr. APJ Abdul Kalam second Remembrance Day 450 participants participated on 21. 07.17 at MSEC**






**National Maritime celebration 111 participants participated on 04. 04.17 at MSEC**










**Republic day celebration 155 participants participated on 26. 01.17 at MSEC**





**Year 2016**

**August**

**Independence Day celebration 155 participants participated on 15.08.16 at MSEC**




**June**

**Ifthar Function celebration 249 participants participated on 28.06.16 at MSEC**




**April**

**National Maritime celebration 96 participants participated on 04. 04.16 at MSEC**




**January**

**Republic day celebration 122 participants participated on 26. 01.16 at MSEC**





**Year 2015**

**December:**

**MiladiNabi function133 participants participated on 24.12.15 at MSEC**

## இன்றைய நிகழ்ச்சி

கீழக்கரை

பெருமானார் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா: தலைமை-முகம்மது சதக் அறக்கட்டளையின் தலைவர் எஸ்.எம்.யூசுப், சிறப்புரை: காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி பேராசிரியர் மு.சாயபு மரைக்காயர் மற்றும் கீழக்கரை செய்யது ஹமீதா அரபிக்கல்லூரி முதல்வர் எம். சம்சுதீன் ஜமாலி, இடம்- முகம்மது சதக் பொறியியல் கல்லூரி. காலை 10.30.

தினமணி - 24-12-2015 - பக்கம் - 2

**October:**

**Dr.Abdulkalam Birthday function78 participants participated on 16.10.15 at MSEC**

## அப்துல்கலாம் பிறந்தநாளையொட்டி பேச்சு, கட்டுரைப்போட்டி

கீழக்கரை, அக்.16–

மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பிறந்தநாளையொட்டி பேச்சு, கட்டுரைப்போட்டி நடந்தது.

### பேச்சுப்போட்டி

தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வி இயக்கம் சார்பில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பிறந்த நாள் இளைஞர் எழுச்சி தினமாக முகமது சதக் பாலிடெக்னிக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. இதையொட்டி மாவட்ட அளவிலான பேச்சு, கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளை கல்லூரி முதல்வர் அலாவுதீன் தொடங்கி வைத்தார். போட்டிகளில் கல்லூரி மாணவ–மாணவிகள் திரளாக கலந்துகொண்டனர்.

இதில் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் முதலிடத்தை அண்ணா பல்கலைக்கழக மாணவி அர்ச்சனா, 2–வது இடத்தை அப்துல்ரகுமான், 3–வது இடத்தை ஐஸ்வர்யா ஆகியோர் பெற்றனர். இதேபோல பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் முதலிடத்தை முகமது சதக் பாலிடெக்னிக் கல்லூரி மாணவன் பிரபாகரன், 2–வது இடத்தை மகேஷ், 3–வது இடத்தை முகமது பைசல் ஆகியோர் பெற்றனர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற பேச்சுப்போட்டியில் தாசிம்பீவி அப்துல்காதர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி ஜெமிமாபேகம் முதலிடத்தையும், செய்யது ஹமீதா கலை அறிவியல் கல்லூரி மாணவி ரவீனா மதிமலர் 2–வது இடத்தையும், கல்லூரி மாணவி செய்யது வஹிதா 3–வது இடத்தையும் பெற்றனர்.

### கட்டுரைப் போட்டி

இதேபோல் பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற கட்டுரை போட்டியில் அண்ணா பல்கலைக்கழக மாணவி ஐஸ்வர்யா முதலிடத்தையும், முகமது சதக் பொறியியல் கல்லூரி மாணவன் அருண்குமார், அண்ணா பல்கலைக்கழக மாணவி சண்முகப்பிரியா ஆகியோர் 2–வது இடத்தையும், செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி மாணவி அபிநயா 3–வது இடத்தையும் பெற்றனர். பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு இடையே நடைபெற்ற கட்டுரை போட்டியில் உதயம் பாலிடெக்னிக் கல்லூரி மாணவன் திராவிடசெல்வம் முதலிடத்தையும், முகமது சதக் பாலிடெக்னிக் கல்லூரி மாணவன் முகமது பைசல் 2–வது இடத்தையும், உதயா பாலிடெக்னிக் ஜோசுவா 3–வது இடத்தையும் பெற்றனர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கட்டுரை போட்டியில் கீழக்கரை தாசிம்பீவி அப்துல்காதர் பெண்கள் கல்லூரி மாணவி ஐஸ்வர்யா முதலிடத்தையும், செய்யது ஹமீதா கலை அறிவியல் கல்லூரி மாணவி அஸ்ரிபா 2–வது இடத்தையும், தாசிம்பீவி கல்லூரி மாணவி சபினா 3–வது இடத்தையும் பெற்றனர்.

முன்னதாக நடைபெற்ற தொடக்க விழாவில் துறைத்தலைவர் யோசுவா வரவேற்று பேசினார். கல்லூரி மெரைன் துறை தலைவர் சுதேன், முதுநிலை விரிவுரையாளர் மரியதாஸ் ஆகியோர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். ஏற்பாடுகளை துறை தலைவர்கள் யோசுவா, சேக்தாவூது மற்றும் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

தினத்தந்தி - 16-10-2015 - பக்கம் - 17

**July:**

**Dr. APJ Abdul kalam memorial tribute115 participants participated on 30.07.15 at MSEC**
















► டாக்டர். அப்துல்கலாம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் பள்ளி, கல்லூரிகளில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. முதல்படம்: கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரி. 2வது படம்: பரமக்குடி ஆயிரவைசிய பள்ளி. 3வது படம்: பார்த்திபனூர் அரசு மேல்நிலைப்பள்ளி. 4வது படம்: ஆக்கிடா வலசை ஆரம்பப்பள்ளி. 5வது படம்: பரமக்குடி கீழமுஸ்லிம் மேல்நிலைப்பள்ளி.

தினகரன் / 30.07.2015 / பக்க எண் : 15

O/C

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE
DESPATCHED ON
5-8-15

**July:**

**Ifthar function 237 participants participated on 16.07.15 at MSEC**

# கீழக்கரை சதக் கல்லூரியில் இப்தார் நோன்பு நிகழ்ச்சி

பரமக்குடி, ஜூலை 16: கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது.

கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் மதநல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி முதல்வர் முகம்மது ஜகாபர் தலைமை வகித்தார். முகம்மது சதக் அறக்கட்டளை யூசுப்சாஇப் உறுப்பினர்கள் ஹாமீது இபுராகிம், பைசல், ஹுசைன், சதக்தம்பி முன்னிலை வகித்தனர். துணை பேராசிரியர் அகமது ஹுசைன் ஆசிப் கிராத் ஓதி நிகழ்ச்சியை தொடங்கினார். பேராசிரியர் மயில்வேல் நாதன் வரவேற்றார். ஸ்டார் ஹெல்த் மேனேஜிங் டைரக்டர் சலாஹூதீன் நோன்பின் மாண்புகள் குறித்து பேசினார். கீழக்கரை ஹாஜிகாதர் பக்ஸ் ஹுசைன் சித்திக் பயான் துவா ஓதி அனைவரையும் நோன்பு திறக்க வைத்தார்.

ராமநாதபுரம் முன்னாள் எம்எல்ஏ ஹசன் அலி, முனைவர் சாதிக், முகம்மது சதக் பாலிடெக்னிக் முதல்வர் அலாவுதீன், செய்யது ஹமீதா கலைக் கல்லூரி முதல்வர் ராஜபுதீன், கீழக்கரை சேர்மன் ராவியத்துல் கதரியா ஆகியோர் பங்கேற்றனர்.



► கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் மத நல்லிணக்க இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடந்தது.

தினகரன் 16.7.2015 பக்க எண் : 13

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE
DESPATCHED ON
31.7.15

O/C

**April:**

**National Maritime Day Celebration 87 participants participated on 09.04.2015 at MSEC**

# தேசிய கடற்படை தினம்; துறைமுக பாதுகாப்பு கருத்தரங்கு

## மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

கீழக்கரை, ஏப். 9–

கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் இந்திய தேசிய கடற்படை தினம், பன்னாட்டு கப்பல் மற்றும் துறைமுக பாதுகாப்பு கருத்தரங்கம் நடந்தது.

**கடற்படை தினம்**

கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் கப்பல் துறை சார்பாக 52–வது இந்திய தேசிய கடற்படை தினம் மற்றும் இரண்டு நாள் பன்னாட்டு கப்பல் மற்றும் துறைமுக பாதுகாப்பு கருத்தரங்கம் கல்லூரி முதல்வர் முகம்மது ஜகாபர் தலைமையிலும், கல்லூரி இயக்குநர் ஜகுபர் புகாரி முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்திய தேசிய கடற்படை தினத்தை முன்னிட்டு மண்டபம் இந்திய கடலோர காவல் படை கமாண்டண்ட் மோரே கல்லூரி வளாகத்தில் இந்திய கடலோர காவல் படை கொடியை ஏற்றி வைத்து கப்பல் துறை மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். கப்பல் பொறியியல் துறையில் முதல் இரண்டு இடங்களை பிடித்த மாணவர்களுக்கு கேடயமும், சான்றிதழும் சிறப்பு விருந்தினர் மோரே வழங்கி பாராட்டினார். கப்பல் துறைப் பேராசிரியர் மதிகுடி அனைவரையும் வரவேற்றார்.

மண்டபம் இந்திய கடலோர காவல் படை கமாண்டண்ட் மோரே பேசியதாவது:–

கி.மு. 3000 ஆண்டு முதல் சிந்து சமவெளி நாகரீக காலத்திலிருந்து கப்பல் துறை வளர்ந்து இன்று அதிநவீன டிஜிட்டல் தகவல் தொழில்நுட்பத்துடன் முன்னேறி உள்ளது. சங்க காலத்தில் ரோமாபுரியுடன் கப்பல் வர்த்தகம் நடத்தது. மேலும் நமது முன்னோர்கள் தேசப்பற்றுடன் சுதேசிக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்து அந்த கப்பலில் வந்தே மாதரம் என்று கப்பல் கொடியில் நிறுவி கடல் வர்த்தகத்தை நடத்தி வந்தனர்.

பன்னாட்டு வர்த்தகத்திற்கு சரக்கு கப்பல் இன்றியமையாத ஒன்றாகும். இந்தியாவில் அயல்நாட்டு வர்த்தகம்77 கடல்மூலமாகவே நடக்கிறது. மேலும் உலக கடல் வர்த்தகத்தில் இந்தியா 17–வது இடத்தில் உள்ளது என்றார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பன்னாட்டு கடலோர பகுதிகளில் நடைபெறும் கடற் கொள்ளையர்கள் மற்றும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை தடுப்பது மற்றும் அதனை எதிர்த்து போராடுவது எப்படி என்பது பற்றி விளக்கமும் பயிற்சியும் மாணவர்களுக்கு கல்லூரி கப்பல் துறைப் பேராசிரியர்கள் அளித்தனர். கல்லூரி கப்பல் துறைப் பேராசிரியர் தங்கவேலு நன்றி கூறினார்.

இரண்டு நாள் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கப்பல் துறைப் பேராசிரியர்கள் மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் நஜ்முதீன் ஆகியோர் செய்திருந்தனர்.



கீழக்கரை முகம்மதுசதக் பொறியியல் கல்லூரியில் கப்பல் துறை சார்பாக 52–வது இந்திய தேசிய கடற்படை தினம் கல்லூரி முதல்வர் முகம்மது ஜகாபர் தலைமையிலும், கல்லூரி இயக்குனர் ஜகுபர்புகாரி முன்னிலையிலும் நடைபெற்றது. மண்டபம் இந்திய கடலோர காவல் படை கமாண்டர் மோரே அருகில் உள்ளார்.

MOHAMED S
ENGINEERING
KILA
DESPATC

தினமலர்! - 9-4-2015! - பக்கஎண்! 2

**2014**

**November:**

**National integration day Celebration 87 participants participated on 04.11.2014at MSEC**

கீழக்கரை

# முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் தேசிய ஒருமைப்பாட்டு தினம்

கீழக்கரை, அக். 4—

கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் தேசிய ஒருமைப்பாட்டு தினம் நடந்தது.

**சதக் கல்லூரி**

கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் தேசிய ஒருமைப்பாட்டு தினம், சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்த தினம் அக். 31–ந்தேதி கல்லூரி முதல்வர் முஹம்மது ஜஹாபர் தலைமையிலும், கல்லூரி இயக்குநர் ஹபீப் முஹம்மது சதக்கத்துல்லா முன்னிலையிலும் கல்லூரி அனைத்து பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ– மாணவிகளுடன் அனுசரிக்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் தனது தலைமையுரையில் ...ப சமஸ்தானங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வலிமைமிக்க இந்தியாவை உருவாக்கியவர் தலைவர் சர்தார் வல்லபாய் படேல். அவருடைய பிறந்த இந்நாளில் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கொண்டாடுவதில் நாம் அனைவரும் மகிழ்ச்சியடைய வேண்டுமென தெரிவித்தார்.

**உறுதிமொழி**

தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழியை கல்லூரி முதல்வர் வாசிக்க அனைவரும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். கல்லூரி பேராசிரியர்கள் அழகியமீனாள், உமாப்ரியா, நிறைமதி, சண்முகப் பிரியா, அப்பாஸ்மாலிக், விஜயராஜ் மற்றும் மதிசூடி ஆகியோர் சர்தார் வல்லபாய் பட்டேல் நாட்டின் ஒற்றுமைக்கு பாடுபட்டதைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். முடிவில் மக்கள் தொடர்பு அலுவலர் நஜ்முதீன் நன்றி கூறினார்.

4-11-14

6.11.14

**July:**

**Ifthar function Celebration 2000 participants participated on 23.07.2014at MSEC**

# Fast should foster communal harmony and brotherhood, says SP

Special Correspondent

KILAKARAI: Communal harmony, brotherhood and spreading the message of peace were stressed at the Iftar party, organised by Mohammed Sathak Engineering College here on Monday.

More than 2,000 people, including 600 women and students, took part in the party, presided over by Principal J. Mohammed Jahabur.

About 800 Muslims, who were observing fast during the month of Ramadan, broke their fast at the Iftar party held on Monday evening.

Addressing the party, Superintendent of Police N.M. Mylvahanan said observance of fast during the sacred month of Ramalan should go a long way in promoting communal harmony and brotherhood in this communally sensitive district.

Abdul Samad, Professor of Hajee Karutha Rowther Howdia College of Arts and Science, speaking on the occasion, recalled the contributions made by Islam for promotion of peace, harmony and brotherhood.



*Superintendent of Police N.M. Mylvahanan (right) at Iftar party at Mohamed Sathak Engineering College in Kilakarai near Ramanathapuram on Monday.* – PHOTO: L. BALACHANDAR

The Hindu 23.7.14 Page : 2

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE
KILAKARAI
DESPATCHED ON
24.7.14

**July:**

**Human Chain115 participants participated on 22.07.2014at MSEC**

## மனித சங்கிலி

**ராமநாதபுரம், மார்ச் 22-**

ராமநாதபுரத்தில் லோக் சபா தேர்தல் தொடர்பாக, வாக்காளர் விழிப்புணர்வு மனிதசங்கிலி நடந்தது.

மாவட்ட தேர்தல் அலுவலர் நந்தக்குமார் துவக்கி வைத்தார்.

சேதுபதி அரசு கலைக் கல்லூரி, மகளிர் கல்லூரி, செய்யது அம்மாள் பொறியியல் கல்லூரி, கீழக்கரை தாசிம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி, முகமது சதக் பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆர்.டி.ஓ., திருமால்சாமி, தாசில்தார் நீலகண்டபிள்ளை, தேர்தல் தாசில்தார் இளங்கோவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர் :- 22-03-2014 :- பக்கம் : 4 Additional

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE DESPATCH ON 24.3.14

**January:**

**Milainabi157 participants participated on 20.01.2014at MSEC**

## முகமது சதக் கல்லூரியில் மீலாது விழா

கீழக்கரை, ஜன. 20: கீழக்கரை முகமது சதக் பாலிடெக்னிக் கல்லூரியில் ரகுலேகரீம் முகமது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மீலாது விழா கொண்டாடப்பட்டது.

முகமது சதக் அறக்கட்டளை தலைவர் யூசுப் சாகிபு தலைமை வகித்தார். கல்லூரி இயக்குநர் ஹபீப் முகமது சதக்கத்துல்லா, நெல்லை மஸ்ஜித் கபீர் பள்ளி கத்திப் பீர் முகமது, வக்கீல் நாகராஜன் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் அலாவுதீன் வரவேற்றார். முகமது சதக் பொறியியல் கல்லூரி முதல்வர் முகமது ஜகாபர், செய்யது ஹமீதா அரபி கல்லூரி முதல்வர் முகமது இலியாஸ் நபிகள் நாயகத்தின் பெருமைகள் குறித்து பேசினார். கல்லூரி வேலைவாய்ப்பு துறை ஒருங்கிணைப்பாளர் சேக்தாவூது நன்றி கூறினார்.




முகமது சதக் பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற மீலாது விழாவில் முகமது சதக் அறக்கட்டளை தலைவர் யூசுப்சாகிபு பேசினார்.

தினத்தந்தி :- 20-01-2014 : பக்கம் : 11

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE DESPATCH ON 21.1.14

**2013**

**August:**

**Independence Day 117 participants participated on 15.08.2013 at MSEC**



ராமநாதபுரம் மாவட்டத்தில்

# பள்ளி, கல்லூரிகளில் சுதந்திர தினவிழா கொண்டாட்டம்

ராமநாதபுரம், ஆக.16– ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் சுதந்திரதின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**கீழக்கரை**

கீழக்கரை முகமது சதக் என்ஜினீயரிங் கல்லூரியில் முதல்வர் முகமது ஜகாபர், பாலிடெக்னிக் கல்லூரியில் துணை முதல்வர் நவநீதராஜன் ஆகியோர் கொடி ஏற்றினர். செய்யது ஹமீதா கலை அறிவியல் கல்லூரியில் பேங்க் ஆப் இந்தியா வங்கி மேலாளர் சுந்தரராஜன் கொடி ஏற்றினார். விழாவில் கீழக்கரை இந்தியன் வங்கி மேலாளர் தேவகிருபை, முதல்வர் அபுல்ஹசன் சாதலி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ராமநாதபுரம் செய்யது அம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் முதல்வர் அமானுல்லா ஹமீது முன்னிலையில் செல்லத்துரை அப்துல்லா, தேவிபட்டினம் ஊராட்சி தலைவர் ஜாகிர் உசேன் கொடியேற்றினர். ஏற்பாடுகளை நிர்வாக அலுவலர் சாகுல் அமீது, சபியுல்லா பணியாளர்கள் செய்திருந்தனர். முத்துப்பேட்டை கவுசானல் கல்லூரியில் செயலாளர் சேசுதாஸ், கீழக்கரை தாசிம்பீவி அப்துல் காதர் பெண்கள் கல்லூரியில் முதல்வர் சுமையா தாவூது முன்னிலையில் மாவட்ட கூடுதல் நீதிபதி ஜெயந்தி ஆகியோர் தேசிய கொடி ஏற்றினர்.

தினத்தந்தி 16.08.2013

பக்க எண்: 8

O/e

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE

DESPATCHED ON

/17.8.13

**April:**

**National Maritime Day Celebration85 participants participated on 07.04.2013 at MSEC**



**August:**

**Ifthar Celebration 135 participants participated on 03.08.2013 at MSEC**

# கீழக்கரை பள்ளி, கல்லூரிகளில் இஃப்தார் நிகழ்ச்சி

கீழக்கரை, ஆக. 4: கீழக்கரையில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், சமூக நல அமைப்புகள் சார்பில் ரம்லான் நோன்பை முன்னிட்டு இஃப்தார் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முஹம்மதுசதக் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சிக்கு முஹம்மதுசதக் அறக்கட்டளைத் தலைவர் யூசுப் சாகிப் தலைமை வகித்தார். இயக்குநர் ஹபீப்முஹம்மது சதக்கத்துல்லா முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முஹம்மதுஜஹபர் வரவேற்றார்.

முஹம்மதுசதக் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் அலாவுதீன், செய்யது ஹமீதா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் அபுல்ஹசன்சாதலி, கிருஷ்ணமூர்த்தி உள்பட ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை மக்கள் தொடர்பு அலுவலர் நஜிமுதீன் செய்திருந்தார்.

தாசிம்பீவி அப்துல்காதர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில் சீதக்காதி அறக்கட்டளை இயக்குநர் ஹாலிதுபுகாரி, பொருளாளர் ஹசன்தம்பி, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ஹசன்அலி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கல்லூரி முதல்வர் சுமையாதாவூத் வரவேற்றார். துணை பொது மேலாளர் சேக்தாவூத் உள்ளிட்டோர் கல்லூரி நிர்வாகம் சார்பில் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

ஹமீதியா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சிக்கு தாளாளர் எஸ்.எம். யூசுப்



கீழக்கரை முஹம்மதுசதக் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சி.

தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ஹசன்இபுராகீம் வரவேற்றார். வட்டாரப் போக்குவரத்து அலுவலர் காத்தலிங்கம், மாவட்ட டவுன் காஜி சலாஹுதீன் உள்பட ஏர்ளமானோர் கலந்து கொண்டனர்.

ஹைராத்துல் ஜலாலியா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில் பள்ளித் தாளாளர் சாதிக் தலைமை வகித்தார். கிழக்குத் தெரு முஸ்லிம் ஜமாத் தலைவர் சேகுஅபுபக்கர், துணைத் தலைவர் அமீர், கல்விக் குழு உறுப்பினர்கள், நகராட்சி துணைத் தலைவர் ஹாஜா முஹைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கவுன்சிலர்கள், ஜமாத்தார்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கீழக்கரை சமூகநல நுகர்வோர் சேவை இயக்கம் சார்பில் நடைபெற்ற இஃப்தார் நிகழ்ச்சியில் தலைவர் அமானுல்லா தலைமை வகித்தார். செயலர் தங்கம் ராதாகிருஷ்ணன் வரவேற்றார். அவை முனைவர் செய்யது இபுராகீம் முன்னிலை வகித்தார்.

கீழக்கரை ரோட்டரி கிளப் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ரோட்டரி சங்கத் தலைவர் செய்யது ராசிக்தீன் தலைமை வகித்தார். செயலர் சுப்ரமணியன் வரவேற்றார். வடக்குத் தெரு ஜமாத் கத்தீப் சாகுல்ஹமீது, ரோட்டரி சங்க உதவி கவர்னர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக ராமநாதபுரம் தபோவனம் தாயுமான சுவாமி, ராம்குமார்,கீழக்கரை சி.எஸ்.ஐ. தேவாலயத்தின் பேராயர் தேவதாஸ்ராஜன்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கீழக்கரையில் உள்ள அனைத்து மகுதிகளிலும் இஃப்தார் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தினமணி 5-08-2013 பக்கம்-2

5-8-13

**January:**

**Republic Day celebration 125 participants participated on 26.01.2013 at MSEC**

# பள்ளி, கல்லூரிகளில் குடியரசு தின விழா கொண்டாட்டம்



கீழக்கரை முகம்மது சதக் பொறியியல் கல்லூரியில் நடந்த குடியரசு தின விழாவில் கல்லூரி இயக்குநர் ஹபீப் முகம்மது சதக்கத்துல்லா தேசிய கொடியை ஏற்றினார்.

தினமணி 28-01-2013 பக்கம்-14

MOHAMED SATHAK ENGINEERING COLLEGE KILAKARAI 623806

PRINCIPAL
MOHAMED SATHAK ENGINEERING COLLEGE
KILAKARAI-623806.